## தேயிலை ஆராய்ச்சி சபை - 2018

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேயிலை ஆராய்ச்சி சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தின்கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறையை மேற்பார்வை செய்தல் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையில் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகள் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்து நிலைத்திருத்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் கூட்டுத்தாபனத்தின்பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கூட்டுத்தாபனத்தின்கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது விற்கப்பட்ட இரண்டு வாகனங்களின் கிரயமான ரூபா 828,174 தொகை நிலையான சொத்துக்கள் | மீளாய்வாண்டில் விற்கப்பட்ட வாகனங்கள் முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட வாகனமாக உள்ளதுடன் அது | சொத்துக்களின் மீள் மதிப்பை கணக்கீடு செய்யும் போது ஏற்பட்டுள்ள பிழையை |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருந்தும் சொத்துக்கள் கணக்கிற்குச் செலவு வைத்து மீள்மதிப்பு கணக்கிற்கு வரவு வைத்ததன் காரணமாக நிலையான சொத்துக்கள் கணக்கினதும் மீள்மதிப்பு கணக்கினதும் மீதி அப்பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | தொடர்பான கிரயமும் திரண்ட பெறுமானத் தேய்வும் 24 ஆம் இலக்க பேரேட்டில் நிலையான சொத்துக்களின் கீழ் சரியாகக் காட்டப்பட்டிருந்த போதிலும், இவ்வாகனங்கள் 2014 ஆம் ஆண்டிற்கான மீள்மதிப்புச் செயற்பாட்டின் போது இலாபம் / நட்டம் மூலதன ஒதுக்க கணக்கிற்குச் செம்மையாக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை அகற்றும் போது ஒரே தடவையில் செம்மையாக்கி சொத்துக்களின் தேறிய பெறுமதியையும் விற்றுத் தீர்த்தல் இலாபம் / நட்டத்தையும் சரியாக நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குதல் வேண்டும். |
| (ஆ) | பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சிடமிருந்தும் வெளி நிறுவனங்களிடமிருந்தும் செயற்திட்டத்திற்காக கிடைத்த ரூபா 56,468,072 பணம் காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளின் கீழ் சுட்டிக்காட்டுவதற்குப் பதிலாக அப்பணத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவான ரூபா 26,296,616 கழிக்கப்பட்டு தேறிய தொகையான ரூபா 30,171,456 பணம் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காசுப் பாய்ச்சலாக காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக செயற்திட்டத்திற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட பணம் காசுப்பாய்ச்சல் கூற்றில் சுட்டிக்காட்டப் பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டில் பல்வேறு செயற்திட்டங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பணமும் அச்செயற்திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவும் தனித்தனியாக எங்களின் பேரேட்டுக் கணக்குகளில் பதியப்பட்டிருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும் போது பெறுவனவுகளிலிருந்து கொடுப்பனவுகள் கழிக்கப்பட்டு தேறிய பெறுமதியை அறிக்கையிடும் குறைபாடானது 2019 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைத் தயாரிக்கும் போது செயற்திட்டத்திற்கான பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் தனித்தனியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு உட்பாய்ச்சலாகவும் காசு வெளிப் பாய்ச்சலாகவும் தனித்தனியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப் படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| புனித கும்பஸ் தோட்டத்தின் | 2,381,613 | ஐ.எஸ்.ஓ சான்றிதழ் மற்றும் அது தொடர்பான | புனித கும்பஸ் தோட்டத்தின் ISO சான்றிதழ் 2011 ஆம் | நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள |

| | | | | |
|---|---|---|---|---|
| சர்வதேச நியமச் சான்றிதழ் (ISO) | | கொடுப்பனவு விபரம் | ஆண்டின் பின்னர் நாளதுவரையாக இடம்பெற்றிருக்காததுடன் இது தொடர்பாக உரிய உறுதிப்படுத்தல் ஆவணங்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு 2019 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சொத்துக்களின் உரிமையை உறுதிப் படுத்துவதற்குத் தேவையான எழுத்து மூலச் சான்றுகளைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| புனித கும்பஸ் தோட்டத்தில் பணத்தை வங்கியில் வைப்புச் செய்தல் | 1,215,493 | பணத்தை வங்கியில் வைப்புச் செய்வதற்குரிய 06 வவுச்சர்கள் | 56 கொடுப்பனவு வவுச்சர்களுக்கான ரூபா 3,762,777 தொகையான கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் காணாமல் போயிருந்ததுடன் ஆவணங்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு 2019 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | இது சம்பந்தமாக பொறுப்புக்கூறக் கூடிய உத்தியோகத்தர் களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் கொடுப்பனவுகள் தொடர்பான தொடக்க ஆவணங்களை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| சம்பள முற் பணங்கள் | 1,459,000 | 11 கொடுப்பனவு வவுச்சர்கள் | | |
| நானாவித செலவுகள் | 1,052,286 | 39 கொடுப்பனவு வவுச்சர்கள் | | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) புனித கும்பஸ் தோட்டத்தின் பெற வேண்டிய அமைய ஊழியர் கடன் மீதி ரூபா 937,103 மற்றும் விழா மற்றும் விசேட முற்பணங்கள் ரூபா 885,877 தொகை ஐந்து ஆண்டுகளை மிகைத்திருந்ததும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | புனித கும்பஸ் தோட்டத்திற்கு கிடைக்க வேண்டிய அமைய ஊழியர் கடன் மீதி ரூபா 937,103 மற்றும் விழா மற்றும் விசேட முற்பணம் ரூபா 885,877 தொகைகளை அறவிட வேண்டிய நபர்களை இனங்கண்டு அவர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | உரிய தரப்பினர்களை இனங்கண்டு விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வு நடவடிக்கைகளுக்காக முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 2,941,232 பணம் 3 ஆண்டுகளை மிகைத்திருந்தும் | மீளாய்வு நடவடிக்கைகளுக்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட பகுப்பாய்வு வருமானங்கள் பெறுவனவுகளாக முன்னைய ஆண்டிற்கான இலாபத்திற்குச் | சேவைகளை வழங்குவதற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பணங்கள் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட உடன் |

| | | |
|---|---|---|
| அப்பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | செம்மையாக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளினூடாக தீர்த்து வைக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்.**

---

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை அத்தியாயம் II இன் 13.3 ஆம் பிரிவு | பதிற்கடமை நியமனங்கள் செய்யப்பட வேண்டியதானது நிரந்தர நியமனங்கள் செய்யப்படும் வரை தற்காலிக அடிப்படையிலாக இருக்க வேண்டிய போதிலும், சபையின் சிரேஷ்ட கணக்காளர் பதவி மற்றும் 04 பிரிவுத் தலைவர் பதவிகளுக்காக 3 ஆண்டுகளிலிருந்து 7 ஆண்டுகள் வரை நிரந்தர நியமனம் மேற்கொள்ளப்படாது தற்காலிக பதிற்கடமை அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தது. மேலும் அங்கீகரித்த பதவியணியினுள் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் பதவி (OIC) இல்லாதிருந்தும் அப்பதவிகளில் பதிற் கடமைக்காக 7 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு பதிற்கடமை படிகாக மீளாய்வாண்டின் போது ரூபா 355,483 செலவு செய்யப்பட்டிருந்தது. | சிரேஷ்ட கணக்காளர் பதவிக்காக ஒருவரைச் சேர்த்துக் கொள்வதற்காக பத்திரிகை விளம்பரம் வெளியிடப்பட்டிருந்தும் தகைமை பெற்ற விண்ணப்பதாரர்கள் அதற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருக்காததன் காரணமாக இதுவரை அப்பதவிக்காக ஒரு உத்தியோகத்தர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்காததுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மாதிரிகளின் பிரகாரம் இப்பதவிகளின் தகைமைகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளதனால் அதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் அதற்கிணங்க மீண்டும் பத்திரிகை விளம்பரம் வெளியிடப்பட்டு பொருத்தமான ஒரு நபரை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும் வரை இப்பதவியில் கடமைகளை நிறைவேற்றுதல் இடம்பெறுதல் வேண்டும்.<br><br>நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் (OIC) பதவி தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட | தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டு உரிய பதவிகளுக்காக விரைவாக ஆட்சேர்ப்புகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பதவியணியில் இருக்கவில்லை. எவ்வாறாயினும், தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழ் பல தூர பிரதேசங்களில் அமைந்துள்ள 06 பிராந்திய அலுவலகங்களின் நிருவாகம் மற்றும் நிதி நடவடிக்கைகளை முறைப்படியாக மேற்கொள்வதற்காக அந்த நிலையங்களுடன் இணைத்து சேவையாற்றுகின்ற சிரேஷ்ட உத்தியோகத்தர்களினூடாக அச்செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களின் சேவைக்கு மேலதிகமாக இது நிறைவேற்றப்பட்டதனால் அதற்கான படிகள் தேயிலை ஆராய்ச்சி சபையின் அங்கீகாரத்துடன் செலுத்தப்படுகின்றது. அவ்வாறே இந்த உத்தியோகத்தரால் ஆற்றப்படுகின்ற செயற்பாடுகளுக்கு இணங்க அவரின் சம்பளம் மாற்றத்திற்கு உட்படுத்தப்படாது பிரிவுத் தலைவர் - பிராந்திய நிலையம் ஆக பெயரிடுவதற்குத் தேவையான சபைப் பத்திரம் (Board Paper) தற்பொழுது அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2003 யூன் 03 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14 ஆம் பந்தி | மனித வளங்கள் முகாமைத்துவத் திற்காக சட்டவிதிகளைத் தயாரிப்பதற்கு உரிய செயல் நடைமுறைக் கையேட்டினைத் தயாரித்து திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும், சபையினால் அதற்கிணங்க நடவடிக்கை | செயல் முறைக் கையேட்டினைத் தயாரிப்பதற்கு வெளித்தரப்பினர்கள் மூலம் தற்பொழுது விலைமனுக் கோரல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இது பெறுகைக் குழுவினதும் தேயிலை ஆராய்ச்சி சபையினதும் அங்கீகாரத்தின் கீழ் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்பொழுது | செயல் நடைமுறைக் கையேட்டினை விரைவாகத் தயாரித்து உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ஆயத்தம் செய்யப்பட்டுள்ளது. | |
| (இ) | 2006 மார்ச் 01 ஆந் திகதிய 09 ஆம் இலக்க தேசிய பெறுகை முகவராண்மை சுற்றறிக்கையின் 5.4.4 ஆம் வழிகாட்டி | வழிகாட்டியின் பிரகாரம் ஒப்பந்தத்திற்காக பிணையின் அடிப்படையில் ஒப்பந்த தொகையில் 30 சதவீத உச்ச அளவில் முற்பணம் வழங்க கூடியதாக இருந்த போதிலும், அதற்கு முரணாக கொள்கலன் காட்சியறைக்கான ஒப்பந்த பணத்தில் 50 சதவீதம் அதாவது ரூபா 670,000 செலுத்தப்பட்டிருந்தது. | இந்த ஒப்பந்தம் தொடர்பாக ஒரு நிறுவனம் மாத்திரம் முன்வந்துள்ளது. அந்த நிறுவனமும் முற்பணமாக ஒப்பந்த பணத்தில் 60 சதவீதத்தை வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், அவ்வாறானவை எதிர்காலத்தில் இடம்பெறுவற்கான வாய்ப்புக்களை குறைக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் அங்கீகரித்த எல்லைக்குள் முற்பணங்களைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 63,542,018 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 5,831,737 ஆக இருந்தது. அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 57,710,281 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு 2014 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற மீள்மதிப்புக்களை கணக்கீடு செய்தல் மீளாய்வாண்டின் போது இடம்பெற்றதன் காரணமாக சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு 3 ஆண்டுகுளுக்குமாக மீளாய்வாண்டிற்கான கணக்குகளில் செம்மையாக்குதல் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரசட்டத்தின் பிரகாரம் ஏதாவது மாதத்திற்காக செலுத்த வேண்டிய பங்களிப்பு பணத்தை அதற்கு பின்னர் வரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாததன் காரணமாக ரூபா 146,062 தொகை மிகைக்கட்டணமாகச் செலுத்தப்பட்டது. | எதிர்காலத்தில் இவ்வாறான நியதிச்சட்ட கொடுப்பனவு நடவடிக்கைகளை உரிய காலத்திற்குள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தோட்ட அலுவலகத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பங்களிப்பு பணத்தை அனுப்பி வைப்பதற்குரிய உத்தியோகத்தர் தமது கடமையை செயற்திறனாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 இனங்காணப்பட்ட நட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| புனித கும்பஸ் தோட்டத்தில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையத் தோற்றுவிக்காததன் காரணமாக அதிகாரமளித்தல், அங்கீகரித்தல், சான்றுப்படுத்தல் மற்றும் கொடுப்பனவு செய்தல் ஆகிய சந்தர்ப்பங்கள் மற்றும் காசேட்டில் பதிவு செய்தல், வங்கி கணக்கிணக்க கூற்றுக்களைத் தயாரித்தல், ஆகிய செயற்பாடுகள் தனித்தனியாக ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. அப் பலவீனத்தின் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 9,354,332 தொகை மோசடி செய்யப்பட்டிருந்ததுடன் அந்த மோசடி செய்த பணம் பெற வேண்டிய மீதியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக தற்பொழுது ஒழுக்காற்று விசாரணைகள் நடைபெற்றுள்ளதுடன் இவ்வாறு மோசடி செய்த பணத்தை உறுதியாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | புனித கும்பஸ் தோட்டத்தில் உள்நாட்டுத் தேயிலை விற்பனை நிலையத்தில் வங்கியில் வைப்புச் செய்யப்படாத பணம் தொடர்பாக தற்பொழுது பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளரால் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அது சம்பந்தமாக முறையான ஒழுக்காற்று விசாரணைகள் இடம்பெற்று வருகின்ற அதேவேளை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறானவைகள் இடம்பெறுவதனைத் தவிர்ப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதற்கும் அது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளை எடுக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பொறுப்புக்கூறக் கூடிய உத்தியோகத்தர்களுக்காக ஒழுக்காற்று நடைமுறைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிதி கட்டுப்பாட்டிற்காக போதியளவு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை தோற்றுவிக்க வேண்டியதுடன் பின்தொடர் நடவடிக்கையும் எடுத்தல் வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| தேயிலை பயிர்ச்செய்கைத் துறையில் காணப்படுகின்ற பிரச்சினையாகிய மண் புனரமைப்பு காலத்தை குறைக்கும் இயலுமையைப் பரீட்சிப்பதற்காக அமுல்படுத்தப்பட்ட 03 ஆராய்ச்சிகள் ரூபா 5,864,487 செலவு செய்யப்பட்டதன் பின்னர் விஞ்ஞான ரீதியான ஆலோசனைக் குழுவின் | இச்செயற்திட்டத்தின் மூலம் மண்ணின் காபன் அளவு, மண்ணின் தரம், நீரைப் பிடித்து வைப்பதனை அதிகரித்தல், நாடாப்புழு, போரியா ஆகிய நோய் நிலைமைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக முறையான விளைவுகள் எதிர்பார்க்கப்பட்டதனால் SAC குழு நிறுத்துவதற்கு | தேயிலை பயிர்ச் செய்கைத் துறையில் காணப்படுகின்ற தீவிர கவனம் செலுத்தப்பட வேண்டிய தற்காலத்திற்குரிய பிரச்சினையாக இருப்பதனால் சபை இவ்வாறான |

| | | |
|---|---|---|
| தீர்மானத்தின் அடிப்படையில் கைவிடப்பட்டது. | ஆலோசனை வழங்கியிருந்தது. இச்செலவு செய்துள்ள பணத்தை மேற்கூறிய செயற்திட்டங்களுக்கு மேலதிகமாக SPND பிரிவின் மூலம் இணைவாக ஆரம்பிக்கப்பட்டுள்ள உப செயற்பாடுகளுக்காகவும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | ஆராய்ச்சிகள் தொடர்பாக முன்னுரிமை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் என்பன**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| விசேட செயற்திட்டத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தில் ரூபா 14,030,854 செலவு செய்து Walk in Type Environmental Facility பெயருள்ள உபகரணம் 2018 மே 08 ஆந் திகதி இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்தும் அந்த இயந்திரத்தின் செயற்பாடு எதிர்பார்த்த மட்டத்தில் உள்ளதா என்பதனை கட்டளையிடுவதற்கு முன்னர் பரீட்சிக்காததன் காரணமாக சபைக்கு கிடைத்து ஒரு ஆண்டு காலம் கடந்திருந்தும் ஆராய்ச்சிக்காகப் பயன்படுத்த முடியாது விளைவற்றுக் காணப்பட்டது. | இந்த உபகரணம் கேள்வி மனுவில் இணங்கி கொண்ட விபரக்குறிப்புக்களுடன் பொருந்தியிருக்காததன் காரணமாக அந்த உபகரணம் இன்று வரை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் எதிர்பார்ப்பாகிய செயலாற்றலினை (Performance) வழங்குவதற்கு அந்நிறுவனம் தவறியிருந்தது. இதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்காக தேவையான ஆலோசனைகளை வழங்குமாறு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் சட்ட உத்தியோகத்தருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | உபகரணத்தின் செயற்பாடு சபை எதிர்பார்த்த மட்டத்திற்கு உள்ளதா என்பதனை கட்டளையிடுவதற்கு முன்னர் பரீட்சிக்கப்பட வேண்டியிருந்ததுடன் இது சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுத்து நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) நுவரெலியாவில் தேயிலை விற்பனை நிலையத்தை ஆரம்பிப்பதற்காக திருத்தியமைக்கப்பட கொள்கலன் காட்சியறை செப்டிக் தாங்கியுடனான | இந்த தேயிலை விற்பனை நிலையத்தை ஆரம்பிப்பதற்காக உரிய வேளைக்கு உரிய காணியை விடுவிக்க முடியாதிருந்ததன் காரணத்தால் தேயிலை ஆராய்ச்சி சபையின் | செயற்திட்டத்திற்காக பெறுகைகளை மேற்கொள்வதற்கு முன்னர் அவற்றை நிறைவேற்றக்கூடிய சாத்தியம் தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | மலசலகூடம் என்பவற்றை வழங்கி பொருத்துவதற்காக 2018 பெப்ரவரி 26 ஆந் திகதி ரூபா 670,000 செலுத்தப்பட்டிருந்தும் அச்செயற்பாடு மீளாய்வாண்டின் இறுதிவரை முடிவுறுத்தப்பட்டிருக்க வில்லை. | தீர்மானத்திற்கு இணங்க இச்செலவு செய்யப்பட்ட பணத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்காக உரிய திருத்தியமைக்கப்பட்ட கொள்கலனை ஏலமிடுவதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு (TEC) நியமிக்கப்பட்டு அதன் சிபார்சின் பேரில் திணைக்கள பெறுகைக்குழு (DPC) நியமிக்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தேயிலைப் பயிர்ச் செய்கையை துர்நாற்றமுள்ள அந்துப் பூச்சிகளிலிருந்து பாதுகாப்பதற்காக ரூபா 5,513,743 செலவு செய்து அமுல்படுத்தப்பட்ட Development of cost effective methods for Integrated management ஆராய்ச்சிக்குத் தேவையான இரசாயனப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாததன் அடிப்படையில் அந்த ஆராய்ச்சி 2017 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இந்த A22 என்ற Thrust இன் கீழ் 03 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றின் பெயர்கள் A22.1, A22.2 மற்றும் A22.6 ஆகும். A22.1 இல் செயற்பாடுகள் இடம்பெறாதிருந்தும் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் 02 செயற்திட்டங்கள் (A22.2 மற்றும் A22.6) ஆரம்பிக்கப்பட்டன. | ஆராய்ச்சியை மீண்டும் ஆரம்பிப்பதற்கான மாற்று நடவடிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். |
| (இ) | 2003 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட எல்ரீபீ செயற்திட்டத்திற்காக ரூபா 4,142,173 செலவு செய்ததன் பின்னர் அச்செயற்திட்டம் அமுல்படுத்தப்படாது கைவிடப்பட்டது. | LTP செயற்திட்டத்திற்குரிய கணக்கு மீதிகளை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்காக அமைச்சிடம் பல சந்தர்ப்பங்களில் வேண்டுகோள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் 2019 சனவரி 08 ஆந் திகதி அமைச்சினால் தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கு வேண்டுகோள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தரவு கிடைத்ததன் பின்னர் உரிய கணக்கு மீதிகளை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்டத்திற்காக செலவு செய்வதற்கு முன்னர் உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு அமுல்படுத்துதல் வேண்டும். |